வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஒ.மு.எண். 4380/ஆ4/2025 நாள்: 03.09.2026

பொருள் : தேர்வுகள் –பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு –மார்ச் 2026, பள்ளி மாணவர்கள் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் திருத்தங்கள் செய்தல் தொடர்பாக பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்களுக்கு தெரிவித்தல்–சார்பு.

பார்வை : சென்னை அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடித ந.க.எண்.000326/பி4/2026 நாள் 02.09.2026

===============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் கடிதங்களுக்கிணங்க நடைபெற்று முடிந்த மார்ச் 2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ் / ஆங்கிலம்), தலைப்பெழுத்து (Initial), புகைப்படம் (Photo), பிறந்த தேதி மற்றும் பெற்றோர் பெயர் /முகப்பெழுத்து (Parent Name & Initial) ஆகியவற்றில் திருத்தங்கள் கோரி பள்ளி தலைமை ஆசிரியர்கள் வாயிலாக அசல் மதிப்பெண் சான்றிதழ்களுடன் பெறப்பட்ட விண்ணப்பங்களை, 03.09.2026 வியாழக்கிழமை முதல் 11.09.2026 புதன்கிழமை வரையிலான நாட்களில் தங்களுடைய USER ID மற்றும் PASSWORD–ஐ பயன்படுத்தி www.dge.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக திருத்தங்களை பதிவேற்றம் செய்திடுமாறு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மார்ச் 2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ் / ஆங்கிலம்), தலைப்பெழுத்து (Initial), புகைப்படம் (Photo), பிறந்த தேதி மற்றும் பெற்றோர் பெயர் /முகப்பெழுத்து (Parent Name & Initial) ஆகியவற்றில் திருத்தங்கள் இருந்து இதுவரை சமர்பிக்கப்படாத பள்ளித் தலைமை ஆசிரியர்கள் /மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் , வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 11.09.2026 –க்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.//

முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
அணைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் ,
வேலூர் மாவட்டம் .
நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள் ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.